www.Padasalai.Net www.CBSEtips.in

HMD திண்டுக்கல்

# இரண்டாம் பருவ தொகுத்தறித் தேர்வு - 2022

7 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 X 1 = 10

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தூண் என்னும் பொருள் தரும் சொல்

அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை

2. இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) இன்றுஆகி ஆ) இன்றி ஆகி இ) இன்றாகி ஈ) இன்றாஆகி

3. ஏடெடுத்தேன் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......... .

அ) ஏடெடு + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்

இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

4. பின்வருவனவற்றுள் விகுதிபெற்ற தொழிற்பெயர் .......... .

அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

**ஆ) கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

5. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் ............ மீது பொறித்து பாதுகாத்தனர்.

6. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ................ .

7. கருத்து படங்களை அறிமுகப்படுத்தியவர் .................. .

**இ) பொருத்துக.**

8. இயற்சொல் - பெற்றம்
9. திரிசொல் - சோறு
10. திசைச்சொல் - அழுவம்

**ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு சுருக்கமான விடையளி.** 5 X 2 = 10

11. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?
12. கல்வி அறிவு இல்லாதவர் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
13. பதத்தின் இரு வகைகள் யாவை?
14. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

15. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
16. `நன்மைசெய்வதிலும் தீமை உண்டாகும்' - எப்போது?
17. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறு.

**உ) எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளி.** 3 X 4 = 12

18. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?
19. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
20. விகுதி எவற்றைக் காட்டும்?
21. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
22. ஓலைச் சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

**ஊ) பின்வரும் மனப்பாடச் செய்யுளை அடிமாறாமல் எழுதுக.** 4 + 2 = 6

23. "சுட்டி அடிக்கையால்" எனத் தொடங்கும் இரட்டுற மொழிதல் பாடல் எழுதுக.
24. "ஊறும் அறிவு" என முடியும் குறட்பாவினை எழுதுக.

**எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 6 X 1 = 6

25. **பின்வரும் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.** காற்றின் திசை.
26. பொருத்தமான காலம் அமையுமாறு எழுதுக.
    1) ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.
    2) நாங்கள் நேற்று கடற்கரைக்குச் செல்கிறோம்.
27. **மாலை** - என்பதை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.
28. படித்தல் இதில் பயின்று வரும் தொழிற்பெயர் விகுதியை எழுதுக.
29. **பின்வரும் சொற்களுக்கான கலைச் சொல்லை எழுதுக.** i) Artist ii) Storm
30. இடைச்சொல் "ஐ" சேர்த்து தொடரை மீண்டும் எழுதுக. அறம் + கூறினார்.
31. **ஓரெழுத்துச் சொற்களால் நிரப்புக.** 4 X 1 = 4
    1) ........ சுடும். 2) ....... மணம் வீசும். 3) ........ பேசும். 4) .......... பறக்கும்.

**ஏ) கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றுக்கு விடையளிக்கவும்.** 1X6=6

32. தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றை தொகுத்து எழுதுக
33. நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?
34. நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?

**ஐ) ஏதேனும் ஒன்றிற்கு விடை தருக.** 6 X 1 = 6

35. உமது ஊருக்கு நூலகம் ஒன்று அமைத்து தரவேண்டி நூலக ஆணையருக்கு விண்ணப்பக் கடிதம் வரைக. ***(அல்லது)***
    முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்பு மிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com